**செய்தி வெளியீடு எண்: 701** **நாள்:17.10.2019**

# <u>செய்தி வெளியீடு</u>

பஹ்ரைன் நாட்டிலுள்ள ஒரு முன்னணி மருத்துவமனைக்கு ஐந்து வருட பணி அனுபவமுள்ள காஸ்ட்ரோஎன்ட்ரோலாஜிஸ்ட் (Gastroenterologist), கார்டியாலாஜிஸ்ட் (Cardiologist), யுரோலாஜிஸ்ட் (Urologist), காஸ்மேட்டோலாஜிஸ்ட் (Cosmetologist), அவசர சிகிச்சை(Emergency Medicine) மற்றும் எலும்பு முறிவு (Orthopedic) போன்ற பிரிவுகளில் மருத்துவர்கள் தேவைப்படுகிறார்கள்.

மேலும் மூன்று வருட பணி அனுபவமுள்ள ஆண்/பெண் Lab Technicians, மற்றும் அறுவை சிகிச்சை (O.T), எக்ஸ்ரே (X-Ray), ECG (பெண்), ECHO (பெண்) டெக்னிசியன்கள் தேவைப்படுகிறார்கள்.

இது தவிர, ஐந்து வருட பணி அனுபவமுள்ள பிஎஸ்சி/டிப்ளோமா(Nursing) செவிலியர்கள், Microbiologist மற்றும் மூன்று வருட பணி அனுபவமுள்ள Physiotherapist (பெண்) தேவைப்படுகிறார்கள்.

மாதச்சம்பளம் மருத்துவர்களுக்கு ரூபாய் 3,76,000/- முதல் 5,65,000/-, டெக்னிசியன்களுக்கு ரூபாய் 42,500/- முதல் 51,700/- செவிலியர்களுக்கு ரூபாய் 42,500/- முதல் 56,500, பிஸியோதெரபிஸ்ட்களுக்கு ரூபாய் 47,000 முதல் 66,000 வரை மற்றும் அந்த நாட்டு சட்டதிட்டத்திற்குட்பட்ட இதர சலுகைகள் வேலையளிப்போரால் வழங்கப்படும்.

எனவே, தகுதியுள்ளவர்கள் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, அனுபவம், பாஸ்போர்ட், ஆதார் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் வெள்ளைநிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் ovemcldr1@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 31.10.2019-க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் ஊதியம் மற்றும் பணி விவரங்களை **அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன வலைதளம் மூலமாகவும்** www.omcmanpower.com மற்றும் 044-22505886 / 22502267 / 8220634389 / 9566239685 என்ற தொலைபேசி எண்களின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முகவர் எண் Rc.No.B-0821/CHENNAI/CORP/1000+/5/308/84 ஆகும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**